சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.125/2020</u>

20.04.2026

பி.வா.சா.1 திரு.கோவிந்தராஜன், த/பெ.ராமசாமி

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் நடத்துராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். ரவிசங்கர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தில் வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். தாவா இடம் சிங்காரு, ரெத்தினம் ஆகியோருக்கு தமிழக அரசால் மானியமாக கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. தாவா இடம் எங்கு இருந்தது என்றால் எனக்கு தெரியாது. 1965 லிருந்து தேதியூரில் வசித்து வருகிறோம். நாங்கள் வசிக்கும் இடம் கிராம சமுதாய இடமாகும். தாவா இடம் வண்ணான் தொழில் செய்வதற்காக கிராமம் சார்பாக மானியமாக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. முதல்விசாரணையில் 5, 6 பிரதிவாதிகள் என்னுடன் பிறந்தவர்கள் இல்லை என்றால் சரிதான். சேகரின் உடன் பிறந்த சகோதர, சகோதரி என்றால் சரிதான். தாவா கிராமத்தில் ராமசாமி பிள்ளை, ராமசாமி மேஸ்திரி, ராமசாமி பத்தர் என மூன்று ராமசாமிகள் உள்ளார்கள் என்றால் தெரியவில்லை. தேதியூர் கம்மாளதெரு தெரியுமா என்றால் தெரியும். பாலசுப்ரமணியன் மகன் ராஜேந்திரனை தெரியுமா என்றால் தெரியாது. ராஜேந்திரன் தாவா சொத்து அவரின் பாட்டனாருக்கு கிடைத்ததாக குடவாசல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. பட்டாவில் ராமசாமி என உள்ளது. என் தகப்பனார் ராமசாமி இல்லை என்றாலும், அவர் ராமசாமி பத்தரை குறிக்கும் என்றாலும் சரியல்ல. எனது தகப்பனார் பெயர் தான் பட்டாவில் உள்ளது என்பதை காட்ட வேறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் 1965 ல் வீடு கட்டியுள்ளோம் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் சேகர் ஆர்.சி.சி வீடு மானியத்தில் கட்டியுள்ளார் என்றால் வீடு கட்டி பிரச்னையில் நிறுத்தியுள்ளோம். எனது தகப்பனாருககு பூர்வீக ஊர் குத்தாலம் என்றாலும் தேதியூர் இல்லை என்றாலும் சரியல்ல. எனது தாயார்

ஆண்டாள்தான் தேதியூர் கிராமத்தில் பிறந்தார் என்றால் சரிதான். நான் தற்போது வழக்கிற்காக எனது தகப்பனாரின் பூர்வீக ஊர் தேதியூர் என பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. சிங்காரு மேஸ்திரி விடுதலை எழுதிக்கொடுத்துவிட்டதால் நான் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்களுக்கு எப்படி கிடைத்தது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2009 ஆம் வருடம் எனது தகப்பனார் கிராம தொழில் செய்ததற்காக அவரை கவுரவப்படுத்த கிராம முக்கியஸ்தர்கள் எழுதிக்கொடுத்துள்ளார்கள். பதிவு செய்த ஆவணம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. கிராம சொத்தை கிராம முக்கியஸ்தர்கள் எழுதிக்கொடுக்க முடியாது என்றால் சரியல்ல. கிராம சபைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் கிராம மக்களுக்கு சொந்தமானது என்றாலும் தனிப்பட்ட நபர்கள் அதை பொறுத்து ஆவணம் எழுதிக்கொடுக்க முடியாது என்றாலும் சரியல்ல. எனது தகப்பனாருக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லும் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞரை தான் கேட்கவேண்டும். நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வரி ரசீது மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்ததாக சொன்னார்கள். பதிவு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திலுள்ள வீட்டிற்கு மின்இணைப்பு கேட்டு மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். கண்ணுசாமி கட்டிக்கொடுத்த வீட்டிலிருந்துதான் தாவா வீட்டிற்கு மின்சாரம் எடுத்துவருகிறோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தாத்தா கையெழுத்து உள்ளது என்றால் என் தாத்தா கையெழுத்து எனக்கு தெரியாது. தாவா சொத்தை யாரும் யாருக்கும் பதிவு செய்துக்கொடுக்க முடியாது என்பது தான் என் கட்சி என்றால் சரிதான். தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் நானும் ரவிசங்கரும் கொரோனா காலத்தில் ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளோம் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ரசீதுகள் 2003 லிருந்துதான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அந்த ரசீதுகள் கண்ணுசாமி கட்டிய வீட்டிற்கு உண்டானது என்றாலும் சரியல்ல. கண்ணுசாமி வீட்டிற்கு மேற்கே ஒரு ஓட்டுவீடு இருந்தது என்றால் சரிதான். அதன் கதவு எண் 1/106 ஆகும். அந்த வீட்டில்தான் ஆண்டாள் குடியிருந்து கொள்ள கண்ணுசாமி அனுமதிக் கொடுத்திருந்தார் என்றால் இல்லை. ராமசாமி கட்டிய வீடாகும். கதவு எண்.1/106 வீட்டை ராமசாமி கட்டினார் என்பதை காட்ட ஆவணம்

எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. தாவா சொத்தில் 1965 ஆம் வருடத்திலிருந்து எனது தந்தையார் வசித்து வந்தார் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கதவு எண்.1/106 என்பது ஓட்டுவீட்டின் கதவு எண் என்றாலும் அதற்கான ரசீதுதான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரிதான். கண்ணுசாமி குடியிருந்து வீட்டிற்கு கொடுத்த வீட்டு ரசீதுகளை நாங்கள் குடியிருந்த வீட்டிற்குண்டான வரி ரசீதுகள் என தவறாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. கதவு எண்.1/106 ஓட்டு வீட்டிற்கு மின்இணைப்பு உள்ளது என்றால் சரிதான். அதன் மின் இணைப்பு எண்.144 ஆகும். மின்கட்டணம் செலுத்தியதற்கு ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சாட்சி கேள்வி கேட்ட பின்னிட்டும் பதில் அளிக்கவில்லை. பஞ்சாயத்து தலைவர் எனக்கு பழக்கமானவர் என்றால் இல்லை, ஆனால் அவரை தெரியும். கார்த்திக்ராஜா எனது அக்கா மகன் ஆவார். பி.வா.சா.ஆ.12 ஆவணம் கார்த்திக்ராஜா பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13 ஆவணம் எனது தகப்பனார் சலவை வேலை பார்த்துவந்ததற்காக கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13 ஆவணம் 20.06.2009 ல் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.13 ஆவணத்தில் உள்ள முத்திரைதாளில் யாருடைய கையொப்பமும் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13 ஆவணத்தில் கிராம முக்கியஸ்தர்களுக்கு தாவா சொத்து எப்படி உரிமை உள்ளது என்று சொல்லப்படவில்லை என்றால் சாட்சி பி.வா.சா.ஆ.13 ஆவணத்தை பார்த்துவிட்டு பதில் அளிக்கவில்லை. பி.வா.சா.ஆ.13 ஆவணத்தை தீர்மானத்தின் அடிப்படையில் பி.வா.சா.ஆ.13 ஆவணம் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13 ஆவணம் எழுதிக்கொடுத்ததற்கு கிராம முக்கியஸ்தர்கள் பணத்தை பெற்றுக்கொள்ள உரிமையில்லை என்றால் சரியல்ல. கிராம முக்கியஸதர்கள் பணம் பெற்றுக்கொண்டதற்கு ரசீது கொடுத்தார்களா என்றால் இல்லை. வாதிகளுக்கு சொந்தமான தாவா சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் அத்துமீறி வீட்டை கட்டிக்கொண்டு காலி செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எங்களுகக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் தாவா படி வாதிகளுக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.13 ஆவணத்தின் அடிப்படையில்தான் தாவா சொத்தின் உரிமையாளர்கள் என நாங்கள் கட்சி

செய்கிறோமா என்றால் இல்லை. அதற்கு முன்பே நாங்கள் இருந்தோம். பி.வா.சா.ஆ.13 ஆவணத்தின் அடிப்படையில் நான் வழக்கை நடத்தவில்லை. எதிர்வழக்குரையில் பி.வா.சா.ஆ.13 ஆவணத்தின் அடிப்படையில்தான் உரிமை கொண்டாடுவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13 ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றாலும் அதனை எழுதிக்கொடுக்க யாருக்கும் உரிமையில்லை என்றாலும் அதன் அடிப்படையில் நான் உரிமை எதுவும் கோர இயலாது என்றாலும் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டுதான் 3 வீடுகள் கட்டடப்பட்டுள்ளது என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு வீடு கட்டியதால் தான் 1965 லிருந்து குடியிருந்ததை காட்டும் விதமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி வழக்கறிஞர் குறுக்கு விசாரணைக்கு கேட்ட கேள்விகளுக்கு சரியாக பதில் அளிக்காமலும் சிறிது நேரம் சிரித்துக்கொண்டும் நான் சொல்வதை கேளுங்கள் என்றும் சொன்னதை பலமுறை தெரிவித்த போதும் இந்நீதிமன்றம் சாட்சியை கடுமையாக எச்சரித்து அனுப்பிவைக்கிறது.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.